மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: சுகாதாரமும் உடற்கல்வியும்

வாரம் - 5

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியை M.W.F. மிப்ராஸ்
கே/வர/ பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி

Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

பகுதி - 1

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. வெளிக்களக் கல்வியினுள் உள்ளடக்கப்படுவது யாது?
   I.கோலம் அமைத்தல், மலையேறல் II. சைக்கிள் ஓட்டம், தீ மூட்டுதல்
   III. வன ஆராய்ச்சி, நடை பயணம் IV. மேற் கூறிய யாவும்

2. வெளிக்களக் கல்வியின் மூலம் நாம் அடையும் பயன்கள் எவை?
   I.வாழ்வில் இன்பத்தைப் பெறலாம் II. இயற்கையை அறியலாம்
   III. ஆராய்ச்சியில் ஈடுபடும் வல்லமை IV. மேற் கூறிய யாவும்

3. திசையறிகருவி கட்டாயமாக தேவைப்படும் வெளிக்களச் செயற்பாடு யாது?
   I.வன ஆராய்ச்சி II. முகாம் அமைத்தல் III. தீ மூட்டுதல் IV. சைக்கிள் ஓட்டம்

4. வெளிக்களச் செயற்பாட்டை ஒழுங்கமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?
   I.முன் ஆயத்தம் II. முகாம் அமைத்தல் III. முடிவு IV. மேற்கூறிய மூன்றும்

5. உயிர் பல்வகையைப் பற்றிக் கற்றுக் கொள்வது எவ்வகையான வெளிக்களச் செயற்பாடு?
   I.வன ஆய்வின் போது II. மலையேற்றத்தின் போது
   III. நடைப்பயணத்தின் போது IV. முகாம் அமைக்கும் போது

6. வனநுட்பம் பற்றிக் கற்கும் போது எதிர்நோக்கும் சவால்கள் எவை?
   I.விலங்கு மூலம் ஏற்படுவன II. நீர் தொடர்பானவை
   III. திசை தொடர்பானவை IV. மேற்கூறிய மூன்றும்

7. திசையறிகருவியைப் பயன்படுத்தும் முறையானது.
   I. சம தரையான நிலத்தில் வைத்தல் வேண்டும்
   II. முள் எப்போதும் தெற்கு நோக்கியதாக இருக்க வேண்டும்.
   III. பாதை செல்லும் திசையில் வைத்தல்
   IV. விரும்பியவாறு வைத்தல்.

8. நடைபயணம் எவ் நோக்கங்களை அடைவதற்காக பயன்படுகின்றது?
   I.மக்களை விழிப்பூட்டுவதற்கு II. பணம் வசூலிப்பதற்கு
   III. பாத யாத்திரைக்காக IV. மேற்கூறிய மூன்றும்

9. தேசப்படங்களில் உபயோகிக்கப்படும் அடையாளங்களாவன.
   I.பிரதான பாதை II. குகைப்பாதை III. நீர் நிலைகள் IV. மேற்கூறிய மூன்றும்

10. பயணப்பாதை அடையாளங்கள் எவை?
    I.மரக்கிளை ஒன்றை உடைத்து தொங்கவிடல் II. மிருகங்களின் மீதி உணவுப்பகுதிகள்
    III. பெரிய கற்களைப் பயன்படுத்தி சில வடிவங்களை அமைத்தல் IV. மேற்கூறிய மூன்றும்

## பகுதி - 2

1.

I. வெளிக்களச் செயற்பாடுகள் எவை?

II. வெளிகளச் செயற்பாடுகளின் போது எதனை விருத்தி செய்துக்கொள்ளக்கூடிய உயர் பண்புகள் எவை?

2.

I. வெளிக்கள செயற்பாட்டை ஒழுங்கமைக்கும் வழிமுறைகளின்போது பின்பற்றவேண்டியவைகள் யாவை?

II. வெளிகளச் செயற்பாட்டின் முன் ஆயத்தத்தின் போது கவனிக்க வேண்டியவை எவை?

3.

I. வெளிக்கள பயணம் ஒன்றின் போது கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள் எவை?

II. வன நுட்பக்கல்வி மூலம் எதிர்பார்க்கப்படுவது யாது?

4.

I. மலையேறுதலின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

II. வன ஆய்வின் முக்கிய நோக்கங்கள் எவை?

III. வன ஆய்வின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் எவை?